# March 15, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உணவகங்கள், தேநீர் கடைகளில் மின்அடுப்புகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் கூடுதல் மின் நுகர்வில் யூனிட்டுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. வணிகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விநியோகம் சீராகும் வரை தொழிற்சாலைகளுக்கும் சில சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் எடுக்கப்பட்ட முடிவுகள்:

- உணவகங்கள், தேநீர் கடைகள், கிளவுட் கிச்சன் உள்ளிட்ட உணவு உற்பத்தி தொழில்கூடங்கள் எரிவாயுக்குப்பதிலாக மின் அடுப்புகளைப் பயன்படுத்தும்போது ஏற்படும் கூடு தல்மின்சார நுகர்வுக்கு யூனிட்டுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும். மத்திய அரசு அறிவித்துள்ள வணிக எரிவாயு பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் காலம் வரை இந்த மானியம் வழங்கப்படும்.
- எரிவாயு பயன்படுத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் மின் அடுப்புகள் மின் சூடேற்றிகள் உள்ளிட்ட மின் உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்கு இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், 25 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 லட்சம் மானியத்துடன் கடனுதவி, தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 25 சதவீதம் அல்லது ரூ.2 லட்சம் மானியத்துடன் ரூ.10 லட்சம் வரை கடனுதவி, அண் ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின்கீழ் 35 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.1 கோடி வரை மானியத்துடனும் கடனுதவி வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் 60,698 தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் இசைவாணையைப் பெற்று, எல்பிஜி, சிஎன்ஜி, டீசல், பர்னஸ் ஆயில் விறகு போன்றவற்றை எரிபொருளாகப் பயன்படுத்தி இயங்கி வருகின்றன.
- இந்த நிறுவனங்கள் எல்பிஜி, சிஎன்ஜி போன்ற எரிபொருள்களுக்கு மாற்றாக மண்ணெண்ணெய், ஆர்டிஎஃப், எச்எஸ்டி, பயோமாஸ் போன்றவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; இதற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் இசைவாணையைப் பெறத் தேவையில்லை, தகவல் தெரிவித்தால் மட்டும் போதுமானது; மத்திய அரசு அறிவித்துள்ள எல்பிஜி, சிஎன்ஜி பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் வரை இந்தவிலக்கும் அமலில் இருக்கும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(i) பால் கொள்முதல் :-

- தமிழ்நாடு முழுவதும் 9,300 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தினமும் 55 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து கையாளும் திறன் உள்ளது. இப்போதைய இடர்ப்பாட்டால் மீதமாகும், தேவைக்கு அதிகமான பாலை பால் உற்பத்தியாளர்களிடமிருந்து ஆவின் பால் கூட்டுறவு சங்கங்களில் கட்டுப்பாடுகள் ஏதுமின்றி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க ஆணையிடப்பட்டுள்ளது.
- எரிவாயு பற்றாக்குறையால் உணவகங்கள் மூடப்படும் வேளையில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் காய்கறி விற்பனை பாதிக்கப்படலாம். விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொண்டு, விவசாயிகளை தாங்கள் விளைவித்த காய்கறிகள் மற்றும் பழங்களை இடர்ப்பாடின்றி 194 உழவர் சந்தைகளில் எவ்விதக் கட்டுப்பாடு இல்லாமல் விற்பனை செய்ய அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- மேலும், மாநில அளவில் வணிக நிறுவனங்களுக்கு முறையாக எல்பிஜி சிலிண்டர் அளவீட்டை ஒதுக்கீடு செய்து கண்காணிக்க தலைமைச் செயலர் கண்காணிப்பில் அரசு உயர் அலுவலர்கள் கொண்ட குழு செயல்படவும், இதே போல மாவட்ட அளவில் எண்ணெய் விநியோக நிறுவனங்களின் பொறுப்பு அலுவலர்களை உள்ளடக்கிய மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு கண்காணிக்கவும் முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

(ii) கூடுதல் மண்ணெண்ணெய்:

- இந்த மாதம் பொது விநியோகத் திட்டத்துக்குகூடுதலாக 3.228 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக் கீடு செய்யப்பட்டு குடும்ப அட்டை தாரர்களுக்கு வழங்க

ஆணையிடப்பட்டுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. இந்தியாவின் மிக உயர்ந்த இலக்கிய விருதாகக் கருதப்படும் ஞானபீடம், பிரபல தமிழ்க் கவிஞரும் திரைப்படப் பாடலாசிரியருமான ஆர்.வைரமுத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(i) இந்த விருதை 23 ஆண்டுகளுக்குப் பிறகு பெறவுள்ள தமிழ் இலக்கியவாதி வைரமுத்து.

(ii) இலக்கியம், படைப்பாற்றல், கவிதைக்கு வைரமுத்து ஆற்றிய சிறந்த பங்களிப்பைப் போற்றும் வகையில் பாரதிய ஞானபீடம் அமைப்பானது, 2025-ஆம் ஆண்டுக்கான அதன் 60-ஆவது ஞானபீடம் விருதை அறிவித்துள்ளது.

(iii) கவிஞரும், எழுத்தாளருமான ஆர்.வைரமுத்து, 1953, ஜூலை 13- ஆம் தேதி பிறந்தார். இவரது கவிதைகளும், படைப்புகளும் மனித நேயம், சமூக அக்கறை, இயற்கையின் மீதான ஆழ்ந்த உணர்திறனை வலிமையுடன் சித்தரிக்கின்றன.

(iv) தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பங்களிப்பு பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கவிதைத் தொகுப்புகள் மற்றும் நாவல்கள் உள்பட 37-க்கும் மேற்பட்ட நூல்களை இவர் எழுதியுள்ளார். இவரது முக்கிய இலக்கியப் படைப்புகளில் 'கள்ளிக்காட்டு இதிகாசம்', 'கருவாச்சி காவியம்', 'தண்ணீர் தேசம்', 'மூன்றாம் உலகப்போர்' ஆகியவை அடங்கும்.

(v) வைரமுத்து தனது 40 ஆண்டு காலப் படைப்புலகப் பயணத்தில், தேசிய திரைப்பட விருது (சிறந்த பாடலாசிரியர்) ஏழு முறையும், பத்ம பூஷண் (2014), பத்மஸ்ரீ (2003) ஆகிய விருதுகளையும், 'கள்ளிக்காட்டு இதிகாசம்' எனும் தனது நாவலுக்காக சாகித்திய அகாதெமி விருதையும் (2003), கலைத் துறையில் ஆற்றிய பங்களிப்புக்காக தமிழக அரசின் கலைமாமணி விருதையும் பெற்றுள்ளார்.

(vi) 'தமிழ் மொழியானது நாட்டின் முதன்மையான மொழிகளில் ஒன்றாகத் திகழ்ந்தபோதிலும், இதற்கு முன்பு இத்தகைய உயரிய தகுதி வாய்ந்த தமிழ் எழுத்தாளர்கள் இருவர் மட்டுமே ஞானபீடம் விருதைப் பெற்றுள்ளனர்' என்பதை தேர்வுக் குழு சுட்டிக்காட்டியது.

(vii) எழுத்தாளர் அகிலன் (சித்திரப் பாவை நாவலுக்காக) 1975-ஆம் ஆண்டுக்கான ஞானபீடம் விருதையும், ஜெயகாந்தன் 2002-ஆம் ஆண்டுக்கான ஞானபீடம் விருதையும் பெற்றனர்.

(viii) ஞானபீடம் விருதுடன் ரூ.11 லட்சம் ரொக்கப் பரிசும், கடவுள் சரஸ்வதி வெண்கலச் சிலையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ix) பாரதிய ஞானபீடம் ஆய்வு மற்றும் வரலாற்றுமைப்பு கடந்த 1944-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பு சார்பில் வழங்கிய முதல் ஞானபீடம் விருதை கடந்த 1965-ஆம் ஆண்டில் கேரளத்தைச் சேர்ந்த கவிஞர் ஜி.சங்கர குருப்பு பெற்றார்.

3. அமெரிக்காவிடமிருந்து சுமார் 900 கோடி டாலர் மதிப்பீட்டில் நவீன போர் ஆயுதங்களை வாங்குவதற்கான ஒப்பந்தத்துக்கு தைவான் நாடாளுமன்றம் ஒருமனதாக ஒப்புதல் அளித்தது. தைவான் நாடாளுமன்றத்தில் நிலவிய இழுபறி காரணமாக நீண்டகாலமாக இந்த ஒப்பந்தம் நிலுவையில் இருந்தது.

(i) ஒப்புதலையடுத்து நாடாளுமன்றத்தில் பேசிய அவைத் தலைவர் ஹான் குவோ யு. 'நாட்டின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து இம்முடிவு எடுக்கப்பட்டது. ஒப்பந்தம் கையொப்பமான பிறகு ஆயுதங்கள் வந்து சேரும் கால அட்டவணையை அவைக்குச் சமர்ப்பிக்க வேண்டும்' என்றார்.

(ii) இந்த ஒப்புதலுக்கு நன்றி தெரிவித்த தைவான் பாதுகாப்பு அமைச்சகம், மிகச்சரியான ஆய்வு மற்றும் திட்டமிடலுக்குப் பிறகே இந்த ஆயுதங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகக் கூறியது.

(iii) இந்த 900 கோடி டாலர் ஆயுத்த தொகுப்பில் ‘டோ' ரக பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், 'எம்109ஏ7 ரக பீரங்கிகள், ஜாவெலின் ஏவுகணைகள், உலகப் புகழ்பெற்ற ஹிமார்ஸ் ஏவுகணை அமைப்புகள்

ஆகியவை அடங்கும்.

(iv) அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் சீனப் பயணத்தைத் தொடர்ந்து, தைவானுக்கு கூடுதலாக 1,400 கோடி டாலர் மதிப்பிலான ஆயுதங்களை வழங்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. அமெரிக்காவின் நட்பு நாடுகள் தங்கள் பாதுகாப்புச் செலவினங்களைத் தாங்களே ஏற்க வேண்டும் என்ற டிரம்ப்பின் கொள்கைக்கு ஏற்ப, தைவான் அரசு தனது பாதுகாப்பு பட்ஜெட்டை உயர்த்தி வருகிறது.

(v) கூடுதல் பட்ஜெட்டுக்கு அதிபர் கோரிக்கை:

- இதனிடையே, தைவானில் நேரடி அதிபர் தேர்தல் தொடங்கி 30 ஆண்டுகள் நிறைவடைந்த விழாவில் பேசிய அதிபர் லாய் சிங் தே. 4,000 கோடி டாலர் வரை பாதுகாப்பு பட்ஜெட்டுக்கு கோரிக்கைவிடுத்தார்.
- 'தைவான் தற்போது பொருளாதார ரீதியாக பலமாக உள்ளது. நமது பாதுகாப்புச் செலவினமானது நாட்டின் வளர்ச்சிக்கான முதலீடு என்று அவர் வலியுறுத்தினார்.
- சீனா, தைவானைத் தனது நாட்டின் ஒரு பகுதி என்று கூறிவரும் நிலையில், தைவான் இதை நிராகரிக்கிறது.

4. அமெரிக்காவில் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் 'யு விசா' வை பெறுவதற்காக கொள்ளை நிகழ்ந்தது போல நாடகமாடியதாக 11 இந்தியர்கள் அந்நாட்டு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(i) அமெரிக்க அரசால் அளிக்கப்படும் 'யு விசா' பெறுவோர் அந்நாட்டில் 5 ஆண்டுகள் பணியாற்ற அனுமதிக்கப்படுவர். மேலும், 5 முதல் 10 ஆண்டுகளுக்குள் அவர்களுக்கு அமெரிக்க அரசின் 'கிரீன் கார்டு' கிடைக்கவும் வழிவகை ஏற்படும். இந்த 'யு விசா'வானது, குறிப்பிட்ட சில குற்றச் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது. அதாவது குற்றச் செயலால் மன ரீதியாகவோ அல்லது உடல் ரீதியாகவோ பாதிக்கப்பட்டவர்கள், சட்ட அமைப்புகளின் விசாரணைகளுக்கு உதவுவோருக்கு மட்டும் இந்த விசா வழங்கப்படுகிறது.

5. பிகார் மாநில ஆளுநராக, ஓய்வு பெற்ற லெப்டினன்ட் ஜெனரல் சையது அடா ஹஸ்னைன் பதவி யேற்றார்.

(i) தலைநகர் பாட்னாவில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாட்னா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி சங்கம் குமார் சாஹூ, அவருக்கு பதவிப் பிரமாணமும் ரகசிய காப்பு பிரமாணமும் செய்துவைத்தார்.

6. தமிழக காவல் துறையின் உளவுப் பிரிவு டி.ஜி.பி-யாக பி.பாலநாகதேவி நியமிக்கப்பட்டுள்ளார்.

(i) தமிழக காவல் துறையின் அதிகாரமிக்க பதவிகளில் ஒன்றாகக் கருதப்படும் உளவுத் துறை டிஜிபி பதவிக்கு பி.பாலநாகதேவி நியமிக்கப்பட்டார். பொருளாதார குற்றப் பிரிவு டிஜிபி-யாக இருந்த பாலநாகதேவி, உள்வுத் துறை டிஜிபி பொறுப்புக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை தமிழக அரசின் உள்துறை கூடுதல் தலைமைச் 2 செயலர் தீரஜ்குமார் பிறப்பித்தார்.

(ii) தமிழக காவல் துறையின் உளவுப் பிரிவு டிஜிபி பதவிக்கு ஒரு பெண் ஐபிஎஸ் அதிகாரி நியமிக்கப்படுவது இதுவே முதல்முறை.

(iii) தமிழக உளவுத் துறை டிஜிபி பதவி நீண்டகாலம் காலியாக இருந்து வந்தது. உளவுத் துறை ஏடிஜிபி, ஐஜி ரேங்க்கில் உள்ள அதிகாரிகளே, உளவுத் துறை டிஜிபி பணியையும் கூடுதலாக கவனித்து வந்தனர். தற்போது உளவுத் துறை ஏடிஜிபி பதவியில் யாரும் நியமிக்கப்படாத நிலையில் டிஜிபி பதவிக்கு பாலநாகதேவி நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

7. மத்திய சட்டம் மற்றும் நீதித் துறையின் இலவச சட்ட சேவைகள் வழங்கும் திட்டத்தின் கீழ்

தமிழகத்தில் 3 லட்சம் பேர் பயனடைந்துள்ளதாக மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் கூறினார்.

(i) மத்திய சட்டம் மற்றும் நீதித் துறையின் 'திஷா' திட்டத்தின் கீழ் தொலைதூர சட்ட சேவை வழங்கல் குறித்த மண்டல கருத்தரங்கம் சென்னையில் நடைபெற்றது. இதில் மத்திய அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் பேசியதாவது:

(ii) 'திஷா' திட்டத்தின்கீழ், இலவச சட்ட சேவை வழங்குதல், சட்டம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கல்விப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழகத்தில் உள்ள 12,560 பொது சேவை மையங்களில், சட்ட சேவைகள் வழங்கும் திட்டம் மூலம் 3.5 லட்சம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 3.1 லட்சத்துக்கும் அதிகமானோர் பயனடைந்துள்ளனர்.

(iii) சுதந்திரப் போராட்ட வரலாற்றில் அலிப்பூர் சதி வழக்கு மிகவும் முக்கியமானது. இந்த வழக்கில் அரவிந்த் கோஷ் என்றழைக்கப்படும் அரவிந்தர் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டனர்.

(iv) அரவிந்தருக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இதுகுறித்து வெளியான நாளிதழ் செய்தியைப் படித்த சுதந்திரப் போராட்ட தியாகியும், வழக்குரைஞருமான சித்தரஞ்சன் தாஸ் அரவிந்தருக்காக இலவசமாக ஆஜராகி வாதிட்டு, அவருக்கு விடுதலை பெற்றுத் தந்தார். இதுவே நமது நாட்டில் இலவச சட்ட உதவி வழங்கப்பட்ட முதல் சம்பவம் என்றார்.

8. தேசியப் பாதுகாப்பு சட்ட நடவடிக்கையை மத்திய அரசு ரத்து செய்ததையடுத்து, ஜோத்பூர் மத்திய சிறையிலிருந்து சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக் விடுதலை செய்யப்பட்டார்.

(i) லடாக்கிற்கு தனி மாநில அந்தஸ்து அளிக்க வலியுறுத்தி, கடந்த 2025-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24, 25-ஆம் தேதிகளில் வாங்கக் 2 நாள்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். அப்போது ஏற்பட்ட வன்முறையில் 22 காவல் துறையினர் உள்பட 45 பேர் காயமடைந்தனர். மேலும் 4 பேர் உயிரிழந்தனர்.

(ii) இதையடுத்து, 2025-ஆண்டு செப்டம்பர் 26-ஆம் தேதி, சட்டம்- ஒழுங்கு நிலையை சுட்டிக்காட்டி, அவரை லே மாவட்ட ஆட்சியர் உத்தரவின்பேரில் தேசியப் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் காவல் துறை கைது செய்தது. பின்னர் வாங்சுக், ஜோத்பூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டார்.

9. கொல்கத்தா நிகழ்ச்சியில் ரூ18,680 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கிவைத்த பிரதமர் மோடி, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

(i) ஹால்டியாவில் ஹூக்ளி நதியில் அமைந்துள்ள ஹால்டியா துறைமுக வளாகத்தில் அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டல நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்ட நிலக்கரி, தாதுக்கள் உள்ளிட்ட பொருள்களைக் கையாளும் புதிய முனையத்தை பிரதமர் திறந்துவைத்தார்.

(ii) ஆண்டுக்கு 4 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளைக் கையாளும் திறன் கொண்ட இந்த முனையம், முற்றிலும் தானியங்கி வசதிகளுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவில் முற்றிலும் தானியங்கி வசதி கொண்ட நாட்டின் முதல் முனையம் என்ற சிறப்பையும் பெற்றுள்ளது.

10. மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் வணிக பயன்பாட்டுக்கான எரிவாயு சிலிண்டர் விநியோகம் தொடங்கியுள்ளது; சிலிண்டர்கள் பதுக்கப்படுவதைத் தடுக்க அதிரடி சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகம் தெரிவித்தது.

(i) மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள போரால் இந்தியாவில் எரிபொருள் விநியோகத்தில் சிக்கல் எழுந்துள்ளது. முக்கியமாக சமையல் எரிவாயு சிலிண்டர் கிடைப்பதில் பிரச்னை எழுந்தது. வீடுகளுக்கு சமையல் எரிவாயு கிடைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதால் வணிக எரிவாயு சிலிண்டர் விநியோகத்தில் கடும் தொய்வு ஏற்பட்டது.

(ii) பிரச்னைக்கு காரணம்:

- இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையில் 88 சதவீதம், இயற்கை எரிவாயு தேவையில் 50 சதவீதம், எல்பிஜி தேவையில் 60 சதவீதம் இறக்குமதி மூலம்தான் பூர்த்தி செய்யப்படுகிறது.
- கடந்த பிப்ரவரி 28-இல் ஈரானுக்கு எதிரான அமெரிக்கா- இஸ்ரேல் தாக்குதல் தொடங்கும் முன்பு, இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதியில் 50 சதவீதத்துக்கு மேல் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வந்துகொண்டிருந்தது. 85 முதல் 90 சதவீத எல்பிஜி இறக்குமதி, 30 சதவீத பிற எரிவாயு இறக்குமதி அந்த பிராந்தியத்தில் இருந்தே கிடைத்தது. போர் மூண்டதால் உற்பத்தி பாதிக்கப்பட்டதுடன், ஹோர்முஸ் நீரிணையும் மூடப்பட்டது.
- இது இந்தியா உள்ளிட்ட நாடுகளின் எரிபொருள் விநியோகத்தில் சிக்கலை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து ரஷியாவில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ய விதித்த தடையை அமெரிக்கா நீக்கியது.

11. 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் 350 விமான நிலையங்களை உருவாக்குவதே இலக்கு என மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

(i) தூத்துக்குடி விமான நிலையத்தின் பெயரை Tuticorin Airport என்பதிலிருந்து Thoothukudi Airport என மாற்றம் செய்து அதிகாரபூர்வமாக மறு பெயரிடும் விழா விமான நிலைய வளாகத்தில் நடைபெற்றது. விழாவில், நாயுடு சிறப்பு விருந் தினராகப் பங்கேற்று, விமான நிலையத்தின் பெயர் மாற்ற அறிவிப்பை வெளியிட்டு மத்திய அமைச்சர் பேசியதாவது:

- தூத்துக்குடியின் கலாசார மரபைக் கௌரவிப்பதுடன், இப்பகுதியின் அதிகாரபூர்வ தமிழ் அடையாளத்தை முன்னிறுத்தி இந்தப்பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இங்கு ரூ.4,500 கோடியில் புதிய முனையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த முனையம் ஆண்டுக்கு 20 லட்சம் பயணிகளுக்கு சேவையளிக்கும் திறன் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.
- மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று 1.350 கி.மீட்டராக இருந்த ஓடுதளம் 3 கி.மீ. வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால், பெரிய விமானங்கள் இங்கு தரையிறங்க முடியும்.
- 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை முழுமையாக வளர்ந்த நாடாக மாற்றுவது தான் பிரதமர் நரேந்திர மோடியின் இலக்கு. நாட்டில் 2014-இல் 74 விமான நிலையங்கள் இருந்த நிலையில், தற்போது 166 விமான நிலையங்கள் உள்ளன. 2047-க்குள் 350 விமான நிலையங்களை உருவாக்குவதே இலக்கு என்றார் அவர்.

(ii) தமிழகத்தில் விமானப் போக்குவரத்துத் துறை வளர்ச்சியடைந்துள்ளது. சென்னை விமான நிலையத்தில் ரூ.2,500 கோடியில் புதிய முனையம் கட்டப்பட்டுள்ளது. அது சில மாதங்களில் செயல்பாட்டுக்குவரும்.

(iii) சேலம் விமான நிலையம் 'உடான்' திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்படுகிறது. கோவை விமான நிலையம் கூடுதல் பயணிகள் செல்லும் வகையில் விரைவில் மாற்றப்படும்.

(iv) நெய்வேலி விமான நிலையம், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மூலம் செயல்படுத்தப்படுகிறது. வேலூரில் விமானநிலையக் கட்டுமானப் பணிகள் முடிவுற்ற நிலையில், சான்றிதழ் அனுமதிக்காக காத்திருக்கிறது.

(v) மதுரை விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கப்பட்டது. மதுரை விமான நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம்மோகன் நாயுடு சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவித்து, ரூ.94.37 கோடியிலான தொழில்நுட்ப வளாகத்துடன் கூடிய அதிநவீன விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு கோபுரத்தைத் திறந்துவைத்தார்.

(vi) பின்னர், அவர் பேசியதாவது: உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் மக்கள் மதுரைக்கு வருகின்றனர். கோயில் நகரமான மதுரை, தற்போது தொழில் வளர்ச்சியும் பெற்று வருகிறது. மதுரை விமான நிலையத்தில் அதிகபட்சமாக கடந்த 2013 முதல் 2014- ஆம் ஆண்டு வரை 6 லட்சத்து 70 ஆயிரம் பேர் விமானத்தில் பயணித்தனர். தற்போது இந்த எண்ணிக்கை 14 லட்சமாக உயர்ந்துள்ளது.

இந்த வகையில், தற்போது மதுரை விமான நிலையம் 24 மணி நேர சேவையைப் பெற்றுள்ளது.

P.L. RAJ IAS & IPS ACADEMY
SINCE 2006
MAKING YOU SERVE THE NATION